உ
சிவமயம்.

கண்டனூர் கார்த்திகைக்கடைச் சோமவாரக்காதை

ஆசிரியர்,
பண்டித ரத்நம்.

கண்டனூர்,
வயி. ப. சுப்பிரமணியன்செட்டியார் அவர்கள்
பொருளுதவியால்,
வெளியிடப்பட்டது,
பிரமோதூதவாண்டு கார்த்திகைத்திங்கள் ௩௰௨,

" தனவணிகன் " அச்சுக்கூடம், கோட்டையூர்.

முன்னுரை.

கண்டனூர் சோமவாரக் காக்ஷி என்பது சைவ உலகத்தால் க்ஷேத்திரானந்த விழாவாகக் கொண்டாடப் பட்டு வருகின்றது. அடியார்களின் விழிகள் ஆனந்தப் படுவதைப்போல அவர்களின் மனங்களுக்கும் ஆனந்தம் ஊட்டவேண்டும் என்னும் என் நெடுநாள் அவாவை எனது நண்பர் ஸ்ரீமான் பண்டித ரத்நம் அவர்கள் புலவர் விருந்தாகப் பூர்த்திசெய்தனர். அதைத் தமிழ் உலகத்திற்கு அர்ப்பணம் செய் கின்றேன்.

வயி. ப. சுப்பிரமணியன்,

கண்டனூர்.

உ
சிவமயம்.

சோமவாரக் காக்ஷி.

காப்பு.

க்ஷேமவாழ் வாய்க்கவினுர் செப்புகண்ட னூர்மணக்கும்
சோமவாரக் காக்ஷியினைச் சொல்லுதற்கு—நாமணிவாம்
ஓங்காரத் துட்பொருளாம் உட்பொருளின் அற்புதமாம்
பாங்கான ஆனை பதம். (1)

கார்த்திகைத் திங்கள் கடைச்சோம வாரத்தின்
நேர்த்தியைப் பார்த்திடவே நீர்வருவீர்—மூர்த்திகளும்
தண்ணருளே உங்களுக்குத் தந்தருளும் புண்ணியமாம்
கண்ணியமும் சேருங் களித்து. (2)

எங்கெங்கும் மின்சாரம் எங்கெங்கும் சோதிமயம்
எங்கெங்கும் ஆனந்த வின்பமயம்—-நுங்கள்
விழிபருகக் கண்டு விளங்குசிவத் தின்றேன்
மழைபெருகச் செய்வீர் மலர்ந்து. (3)

உத்தமர்காள்! அத்துவிதத் தன்மைதனைக் கண்டு
சித்தந் தெளிந்து சிவங்கொள்வீர்—நித்தமும் [ணர்ந்து
காகமெனக் கூடிக் கலந்துண்பீர் பொங்குசிவ
போகமெனும் வெள்ளத்துட் புக்கு. (4)

மூர்த்திகளைப் பார்த்துநின்று முன்விழுந்து தோத்தரித்
கீர்த்தியொடு செல்வம் சிறக்காதோ—நேர்த்தி [தால்
கண்டாற் கலிதீரும் காமுற்றல் சித்தூரும் [வினைக்
உண்டிடா வழிவேறே யொன்று. (5)

மீனாக்ஷிசுந்தரேசர்.

கண்டாரும் சொல்லுடையாள் காணாருங் காதலித்துக்
கொண்டாடும் மீனக் கொடியிடையான்—வண்டாடும்
தார்மார்பன் கண்டனூர் தந்தசுந்த ரேஸ்வரனை
சீர்மார்பு வீழ்ந்து நினை. (6)

செல்லாயி அம்மை.

கல்வி கொடுத்திடுவாள் கற்பு கொடுத்திடுவாள்
செல்வங் கொடுத்திடுவாள் செல்லாயிச்—செல்வியிவள்
கண்டனூர்ப் பொன்னகரைக் காக்கின்ற தேவதையைக்
கண்டுநீர் வாழ்வீர் களித்து. (7)

நடராஜர்.

ஞானநிலை காட்டிநிறை நாதவொலி காட்டியுயர்
மோனநிலை காட்டிவினை முற்றவிக்கும்—வானமதிச்
செஞ்சடையான் அம்பலத்தான் செய்யநட ராஜன்றாள்
நெஞ்சிடையே கொள்க நினைந்து. (8)

அறுபதின் மூவர்.

பாடுநகற் சீர்த்தியுளார் பண்புடைய கூட்டத்தார்
தேடுநகற் சைவத் திகமுடியார்—நீடுறவே
வாழ்த்தி நலம்பெறுவீர் வாயாரப் போற்றிசெய்வீர்
பாழ்த்தமனம் பூத்துவிடும் பார். (9)

தக்ஷிணாமூர்த்தி.

தென்பாற் குணக்குன்றைத் தேவநிலைப் பாவனையை
அன்பாற் கனிக்கின்ற ஆக்ஷியினைப்—பொன்போலக்
கல்லாலின் நீழற் கருத்தன் றனையிருத்திச்
சொல்லாது சொல்க சுவைத்து. (10)

சோமாஸ்கந்தர்.

கந்தர் மடியிருப்பக் காதலியுஞ் சேர்ந்திருப்பச்
சிந்தை மகிழ்ந்திருந்து சேவைதர—வந்திருக்கும்
மாசோமாஸ் கந்தசிவ வாரிதியில் மூழ்கிவிடின்
வாசா மகோசரமாம் மாண்பு. (11)

விநாயகர்.

கோட்டாலே பாரதத்தைக்கோட்டிடையே தீட்டுவித்த
தேட்டாளன் ஆனைமுகத் தெய்வத்தை—நாட்டீரே
கண்டு தெளிமின்காள் கைகூப்பித் தாழ்மின்காள்
பண்டைப் பழமறையின் பண்பு. (12)

அண்ணாமலையார்.

அன்னமுமாய்ப் பன்றியுமாய் ஆய்ந்தாய்ந்து பார்த்தா
இன்னமுங் காணா மிறையவனை—உன்னுமனம் [னும்
அம்முத்தி தந்தருளும் அண்ணாமலையானை
உம்முட் டுதிசெய்வீர் உற்று. (13)

சமயகுரவர்.

சைவத் தமிழ்மணக்கச் சைவநெறி வாழ்ந்தோங்கத்
தெய்வத் திருவருளின் தேசிகனார்—மெய்வைத்த
நால்வர் திருவடியை நாளும் துதிசெய்து
மேல்வழியை ஆய்வீர் விரைந்து. (14)

தண்டபாணி.

வள்ளி மருங்கிருப்ப வாழ்வேல் கரங்கிடப்பப்
புள்ளி மயில்வளரும் போர்மகன்காண்—உள்ளுவீர்
சுந்தரமும் செந்தமிழும் சொந்தமெனும் மந்திரமும்
தந்திரமாய்த் தந்தருளும் தான். (15)

மகாலக்ஷ்மி.

மாதவத்தின் ஊதியத்தை மானிலத்தின் தேனமுதை
போதனித்தை பூட்டுவிக்கும் பொற்பதத்தை—வேதனித்
நாரணன்றன் மார்பிலங்கும் நாயகியைச் செம்ம [தாம்
சிரணங்கை நீரிணங்கிச் சேர். [லர்சேர் (16)

சண்டேசுரர்.

தக்கசிவ பூசை தனையுதைத்த தாதைதாள்
மிக்கசினத் தால்வெட்டி மேலானோன்—நற்கருணை
வேண்டில் கரங்கொட்டி வேத முறைப்படியே
ஆண்டகையை வேண்டுவீ ரால். (17)

வீரபாகு தேவர்.

பேரசுரர் கூட்டம் பெயர்த்தெறிய வுற்பவித்து
வீரசூர ராக விளங்குபவர்—பேரரசாய்
வீரபா கென்றுரைக்கும் வெற்றியனை யுற்றக்கால்
பேரவா வுந்தணியும் பெற்று. (18)

வைரவர்.

மாவடுகன் தக்கன் மகஞ்சிதைத்த வைரவன்றன்
சேவடியை நீர்நின்று சிந்திப்பீர்—நாவடியின்
றாக்கி நலனளிக்கும் உத்தமராய்ச் செய்துபுகழ்
ஆக்கும் வழியீ தறி. (19)

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி.

மாராஜ ராஜேஸ் வரியம்மை வாழொளியைப்
பாரா திருந்தாற் பயனுளதோ—வாரீர்
உலகருளும் இன்பநிலை ஒன்றுளிக்கும் நற்றாய்
இலகருளும் வாழும் இனிது. (20)

நவக்கிரகங்கள்.

தெவ்வர்களே யானாலும் தேவர்களே யானாலும்
வெவ்வினையை நீக்கி விடுவிக்கும்—தெய்வ
நவக்கிரக நாயகரை நாடோறும் போற்றின்
தவக்கிரக மாகுந் தழைந்து. (21)

செப்பிரமண் யச்செல்வன் சிரிராம நாதன்சேய்
சுப்பிரமண் யப்பெரியன் சொல்கவெனச்—செப்பினனால்
கண்டனூ ரிற்கைலைக் காக்ஷியெழில் தோன்றுதலைக்
கண்டிரத்தி னக்கவினான் காண். (22)

வாழி நகரத்தார் வாழி தருமத்தார்
வாழி தனவணிக மாசனத்தார்—ஊழியொடும்
கல்வியொடு செல்வங் களிப்புடைய புத்திரர்கள்
நல்வினைகள் பெற்று நயந்து. (23)

முற்றிற்று.